T-UN-665

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ் நாடு

தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

மலர் 3 | திருவள்ளுவராண்டு – 2015 வைகாசி - 32 | 14 - 06 - 1984 | இதழ் 3

தமிழ்மொழிப் பாடம் அமைப்பது பற்றிய சென்னை இலயோலாக் கல்லூரிக் கருத்தரங்கு

'தாய்மொழியைப் பயனுள்ள முறையில் புகட்டுதற்கு நாம் நடவடிக்கை அனைத்தையும் எடுக்க வேண்டும். புதிய முறைகளைக் கையாள வேண்டும்'

— என்று தமிழ்ப் பாடம் பயிற்று முறை பற்றிய கருத்தரங்கத் தொடக்க விழாவிற்குத் தலைமை தாங்கிய கல்வியமைச்சர் மாண்புமிகு செ.அரங்கநாயகம் குறிப் பிட்டார்.

'பிற மொழிப் படிப்பு மேன்மை பெறத் தாய் மொழிப் படிப்பு அடிப்படையானது' என்று தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தமது திறப்புரையில் கூறினார்கள்.

மே நான்காம் நாள் முதல் ஆறாம் நாள் வரை முப்பது கல்லூரித் தமிழாசிரியர்கள் பங்கு கொண்ட இக் கருத்தரங்கு இலயோலாக் கல்லூரியில் நிகழ்ந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகம் இந்தக் கருத்தரங்கிற்கு ஏறத்தாழ 50 விழுக்காடு பொருளுதவி செய்துள்ளது.

'இளங்கலை படித்த தமிழ் மாணவர்களில் சுமார் 70 விழுக்காட்டினர் பல்வேறு துறைகளில் எழுத்தராகச் சேர்ந்து படிப்படியாக முன்னேறி ஒய்வு பெறுகின்றனர். எனவே, அவர்கள் பெரும் பகுதியாகப் படிக்கும் தமிழ் மொழியில் மாற்றம் வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று இந்தக் கருத்தரங்கு பரிந்துரை செய்துள்ளது. பேராளரின் கட்டுரைகளும் சொல்லா டல்களும் அச்சேறுதற்கு முனைவர் க.ப. அறவாணனால் சீராக்கப்படுகின்றன.

வல்லத்தில் அகழ்ஆய்வு



கோட்டைச் சுவர் மீது அகழ்வுக் குழி

தமிழ்ப் பல்கலைக் கழகம், கல்வெட்டியல் துறையின் தொல்லியல் பிரிவு கடந்த மூன்று திங்கள் களாகத் தஞ்சைக்கருகில் உள்ள வல்லம் கோட்டைப் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்ததில் வல்லத்தின் பழமையைப் பற்றிய சில புதிய செய்திகள் கிடைத் துள்ளன. கி.பி. இரண்டு அல்லது மூன்றும் நூற் றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்தில் எழுதப் பட்ட சில பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இதே காலத்தைச் சேர்ந்த தட்டையான,வரிகளுள்ள கூரை ஓடுகளும் கிடைத்துள்ளன. இந்த ஓடுகள் சோழர் காலத்தில் வழக்கொழிந்துவிட்டன என்று தெரிகிறது. கிறித்துவுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப் படும் அரிய எலும்பு அம்பு முனைகள் தமிழ்நாட்டில் முதன் முறையாக அதிக அளவில் இங்கேதான் கிடைத்துள்ளன.

பிராமி எழுத்துக்கள் கொண்ட பானைச் சில்லுகள்

காவியக் கருத்தரங்கம்

'பாரத சக்தி மகா காவியம்', இந்தியாவையும் மனித இனத்தையும் எதிர்கால நோக்கில் விளக்குகிறது. போர் - மதத் தலைவனை, காப்பியத் தலைவனாக அமைப்பதிலிருந்து வேறுபட்டு அரசியல் தலைவனைக் கதைத் தலைவனாகக் கொண்டிருக்கிறது.

—எனும் பாராட்டுரைகள்,

காவியக் கருவின் வளர்ச்சி சில இடங்களில் தொய்வடைகிறது. பாத்திரப்படைப்பு இயற்கையாயில்லை. காவியத்தில் உருவகப் பண்பே முக்கியமானதாயுள்ளது.

—எனும் குறைபாட்டுரைகள் ;

இவ்விருவகைக் கருத்துரைகளும், மே திங்கள் 11,12,13 ஆகிய நாள்களில் தமிழ்ப் பல்கலைக் கழக அரண்மனை வளாகத்தில் நடைபெற்ற 'பாரத சக்தி மகா காவியக் கருத்தரங்'கில் இடம்பெற்றன.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின், மாமன்னன் இராசராசன் பரிசினைப் பெற்ற கவியோகி சுத்தானந்த பாரதியாரின் 'பாரத சக்தி மகா காவியம்' என்னும் காப்பிய நூலின் அருமை பெருமைகளை ஆய்ந்த இக் கருத்தரங்கினை மாண்புமிகு துணைவேந்தர் டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கவிஞர் அரங்க. சீனிவாசன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் வரவேற்றார்கள்.

ஆங்கில இலக்கியத்தின் காவியப் பண்பினை நன்குணர்ந்தோர் நால்வரடங்கிய பன்னிரு ஆய்வாளர்களுடன் இருபது பார்வையாளர்களும் கருத்தரங்கில் பங்கு கொண்டனர். முனைவர் து. சீனிச்சாமி அவர்களின் சீரிய முயற்சியால் கருத்தரங்கம் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

இதாலிக் (Italic) அச்செழுத்து எப்போது தோன்றியது?

நாம் படிக்கிற சில நூல்களில் இதாலிக் அச்செழுத்து பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். இதாலி நாட்டைச் சேர்ந்த அல்துசு மனுதியுசு என்பவர்தாம் இதை முதன் முதலாக அறிமுகம் செய்தார்.

மொழிப் பிணக்கு — ஒன்று பற்றி மற்றொன்று.

பிராகிருத மொழியைப் பற்றி, சமற்கிருதத்தில் 'பாலான மகிலான புத்திமந்தான பாஷை' (குழந்தைகள், பெண்கள், முட்டாள்களுடைய மொழி) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சமற்கிருத நாடகங்களில் அரசர்கள், அந்தணர்கள் முதலிய உயர்ந்தோர் எனக் கருதப்பட்டவர்கள் சமற்கிருத் மொழியில் பேசுவதாகவும், பெண்கள், ஏவலாள், நகைச்சுவையாளர்கள் போன்றோர் பிராகிருதத்தில் பேசுவதாகவும் எழுதப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

அதுபோலவே சமற்கிருத மொழியைப் பற்றிப் பிராகிருத மொழியில் 'டச்சசு சக்கய கவ்வம் சக்கய கவ்வம் ச நிம்மியம் ஜேன' சமற்கிருதக்காவியத்தையும், அதை எழுதியவர்களையும் கொளுத்துங்கள் என்று கூறப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இராசசேகரர் எழுதிய கற்பூர மஞ்சரியில் 'பெண்களைப் போன்று மென்மையானது பிராகிருத மொழி; ஆண்களைப் போன்று கரடு முரடான மொழி சமற்கிருதம்' என்று கூறப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

—ஆ.கார்த்திகேயன்,
பிராகிருத இளநிலை ஆய்வாளர்

கண் சிகிச்சையும் அதற்கான தண்டனையும்

கி.மு.1000இலேயே இந்தியாவில் கண்படல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதே கால கட்டத்தில் பாபிலோனியாவிலும் கண்படல அறுவைச் சிகிச்சை நடந்திருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு எவ்வளவு பணம் தர வேண்டும் என்பதும் பாபிலோனிய நாட்டுச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டிருந்தது. பணக்காரனுக்கு 10 சேக்கில்சு (பாபிலோனிய நாணயம்) என்றால் அடிமைக்கு 2 சேக்கில்சுதான். இதனால், அறுவை மருத்துவர்கள் நல்ல ஒரு தொகையைச் சம்பாதிக்க முடிந்தது என்றாலும், அவர்கள் வாழ்க்கையில் அமைதி இருந்ததாகச் சொல்ல முடியாது. அறுவைச் சிகிச்சை தவறுதலாகி, பணக் காரன் கண் குருடாகிவிட்டால், மருத்துவன் தனது கைகளை வெட்டிக் கொடுத்துவிட வேண்டும்; அடிமையின் கண் குருடாகிவிட்டாலோ, மருத்துவனே அடிமை யாகிவிட வேண்டும்.

—அறிவியல் பண்ணை

சைவ சித்தாந்த மேனிலைப் பயிற்சி வகுப்புகள்

காஞ்சி தத்துவ மையம் பல்கலைக் கழக மானியக் குழு உதவியுடன் சைவ சித்தாந்த மேனிலைப் பயிற்சி வகுப்பினை 9-5-'84 முதல் 29-5-'84 வரை நடத்தியது. இவ்வகுப்பின் துவக்க விழா தத்துவ மைய அரங்கில் 9-5-'84ஆம் நாள் காலை 9.30 மணியளவில் நிகழ்ந்தது. தவத்திரு குன்றக்குடி அடிகளார், மாண்புமிகு துணைவேந்தர் டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் ஆகியோரது வாழ்த்துரையுடன் வகுப்புகள் துவக்கி வைக்கப்பட்டன.

பேராசிரியர் வி.இராமகிருட்டிணன் இவ்வகுப்பின் இயக்குநர் ஆவார். தத்துவ மைய அறிஞர்களான பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம், மகாவித்துவான் அருணைவடிவேல் முதலியார் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் டாக்டர் வை.இரத்தினசபாபதி ஆகியோர் வகுப்புக்குரிய ஆய்வுப் பகுதிகளை அறிமுகப் படுத்தும் பொறுப்பேற்க, பேராசிரியர் வ.அ. தேவ சேனாபதி, திரு ந. இரா. முருகவேள் ஆகியோருடன் வகுப்பு இயக்குநரும் மதங்களைக் குறித்த தத்துவ விளக்கங்களைப் புதிய ஆய்வுகளின் அடிப்படையில் தருகின்றனர்.

தமிழர்களிடமிருந்து பண்டர்பூரின் உருவாக்கம்

(பண்டர் என்பது மராத்திய மாநிலத்திலுள்ள புகழ் பெற்ற வைணவத் தலமாகும்.)

'பட்டர்' என்றால் பக்தி கீதம் அல்லது 'பாடுவோர் குழு' என்ற பொருள் தமிழ் மொழியில் இருந்தது. 'அரங்கம்' என்றால்'ஆறு' அல்லது 'ஆற்றங்கரை'. குறிப்பிட்ட ஆற்றங்கரைப் பகுதியில் பாடுவோர் குழு முதல் 'பட்டரங்கம்' என்று சொல்லப்பட்டது. இந்தத் தமிழ்ச் சொல்லிலிருந்துதான் 'பண்டர்பூர்' என்ற பெயர் வந்திருக்க வேண்டும். பண்டர்பூர் திருத்தலம் நிறுவுவதிலும் தமிழ் மொழியாளர்களின் பெரும் பான்மை இருந்திருக்க வேண்டும் என்று திரு டொங்கரே அவர்கள் (பண்டர்பூரில் நடைபெற்ற கருத்தரங்கில்) கூறினார்கள்.

—கேசரி (மராத்திச் செய்தித்தாள்)
புனே, 8—2—1984 பக்—1

செய்தி: இராக. விவேகானந்த கோபால், இளநிலை ஆய்வாளர் (மராத்தி), தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப்பல்கலைக்கழக அருங்காட்சியகம்

தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகத்தில் தமிழர்தம் வரலாற்றையும், பண்பாட்டையும் புலப் படுத்தும் பலதிறப்பட்ட பழமையும், புதுமையும் கொண்ட 1500 அரும்—பொருள்கள் சேர்க்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் 30-4-1984 அன்று இவ் அருங்காட்சியகத்தைப் பொது மக்களின் பார்வைக்காகத் திறந்து வைத்தார்கள். அருங் காட்சியகத்தைக் காண வருமாறு தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகம் அனைவரையும் அன்புடன் வரவேற் கிறது.

மறுமொழி அறிவியல்

இயற்கை எதையும் பெறாது
ஒன்றையும் நமக்குத் தராது.

அறிவியற் பழமொழி ப.167

நாற்றுக்கணக்கு

மஞ்சட் கொல்லை என்ற கிராமத்தில் (சிதம்பரம் வட்டம் தெ.ஆ. மாவட்டம்) நெல் வயல்களில் நாற்றுகளைப் பிடுங்கிக் கட்டும்போது பின்வரும் கணக்கு பயன்படுத்தப்படுகிறது.

கைப்பிடிக்குள் அடங்கும் ஒரு நாற்றுக்கட்டு ஒரு 'முடி'.

பத்து முடி கொண்டது ஒரு 'கலசம்'

பத்து கலசம் கொண்டது ஒரு 'கட்டு'

ஓர் ஏக்கர் நிலத்திற்கு இத்துணை கட்டு நாற்று தேவைப்படும் என்று கணக்கிடுவதற்கும், ஓர் ஆள் ஒரு நாளில் எத்துணை கட்டு நாற்று பிடுங்கியுள்ளான் என்று அறிவதற்கும், ஒரு பெண் ஒரே சீராக நட்டால் ஒரு நாளில் எவ்வளவு நிலத்தில் எவ்வளவு நாற்று நட முடியும் என்று கணக்கிடுவதற்கும், நாற்று விற்பனைக்கும் இக் கணக்கு பயன்படுத்தப்படுகிறது.

—நேரிற் கண்டு தெரிவித்தவர்;

திரு ஆ. இராமநாதன் சமூகவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82XZ

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

ர் திலகம்
சாண்டி முதலி சந்து
ா வீதி

சூரிய அடுப்பு:

வினாவும் விடையும்

சூரிய அடுப்பு மழைக் காலத்தில் பயன்படுமா?

பயன்படாது. ஆனால், தமிழ்நாட்டில் 300 நாள்கள் வெயிலடிக்கிறது. 60,65 நாள்கள்தான் மழை பெய்கிறது. எனவே, மழைக்காலத்தில் எரிவளி (Gas) அடுப்பு உள்ள வீடுகளில் எரிவளி கிடைக்காதபோதும் மாற்று ஏற்பாடு செய்து கொள்வது போல வேறு எரி பொருள் சாதனங்களைப் பயன்படுத்தலாம்.

சூரிய அடுப்பில் சமைக்கும்போது சுவை மாறுபாடு ஏற்பாடுமா?

ஏற்படாது. பிற அடுப்புச் சமையலில் கிடைப்பதைவிட மிகுதியாக வைட்டமின் ஏ, டி சத்து இதில் கிடைக்கிறது. இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளவர்கள் சூரிய அடுப்புச் சமையலை உண்பது நல்லது என்று சொல்லுகிறார்கள்.

சமையலுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?

அதிக அளவு 2 மணி நேரம் ஆகும். சோறு ஆக்கி, குழம்பு வைத்துக் கொள்ளலாம்.

எவ்வளவு விலை ஆகும்?

சூரிய அடுப்பில் 3 வகைகள் உள்ளன. முதல் வகையில் 4 பாத்திரங்கள் வைத்துச் சமைக்கலாம். உரூ.550/– ஆகும்; இரண்டாம் வகை 3 பாத்திரங்கள் உரூ.400/– மூன்றாம் வகை 2 பாத்திரங்கள் உரூ.225/-, எந்த வகை அடுப்பை வாங்கினாலும் அரசு உரூ.150/– உதவித் தொகை தருவதால், அந்த உருவாயை கழித்துக் கொண்டு மீதியை விற்பனையாளரிடம் கொடுத்தால் போதும். முதல் வகை 1 லிட்டர்; இரண்டாம் வகை 3/4 லிட்டர், மூன்றாம் வகை 1/2 லிட்டர் அரிசி யிட்டுச் சோறாக்கலாம்.

பழுதுபட்டால் என்ன செய்வது?

பழுதுபட வாய்ப்பில்லை. அடுப்பில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடி உடைவதற்கு மட்டும் வாய்ப்புண்டு. அப்போது அதை மாற்றிக் கொள்ளலாம்.

தமிழ்ப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகள்

1) "பெரிய திருமொழி உரையும் தமிழாக்கமும்"
நூல் வெளியீட்டு விழா
இடம்: தத்துவ மையம், காஞ்சி
நாள்: 29-5-'84

2) சமூகவியல் கட்டில் துவக்க விழா சொற்பொழிவு
இடம்: பல்கலைக் கழகக் கருத்தரங்க அறை
நாள்: 2-6-'84
நிகழ்த்துபவர்: பேராசிரியர் சீ.செ.தேக்கமலை

3) அறிவியல் தமிழ்ச் சொல்லாக்கத் தொகுப்புக் கருத்தரங்கம்–துவக்க விழா
இடம்: பல்கலைக் கழகக் கருத்தரங்க அறை
நாள்: 4-6-'84

4) ஓவிய, சிற்பத்துறைக் கலைஞர் முகாம்—தொடக்க விழா
பல்கலைக்கழக வளாகம், தஞ்சாவூர்.
நாள் : 8-6-'84.

5) கல்வெட்டியல் துறை–கருத்தரங்குத் தொடக்கவிழா
இடம்: பல்கலைக் கழகக் கருத்தரங்க அறை
நாள்: 10-6-'84

6) கணிப்பொறியின் நூலகப் பயன்பாடு – பட்டறை
இடம் : பல்கலைக் கழகக் கருத்தரங்க அறை
நாள் : 10-6-'84

7) நன்னூற் காண்டிகையுரை — வெளியீட்டு விழா
இடம் : பல்கலைக் கழகக் கருத்தரங்க அறை
நாள் : 10-6-'84.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம், தஞ்சாவூர் — 613 001.